1967 நவம்பர் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அரசினர் நூல் நிலையக் குழுவுக்கு (State Library Committee) 1 ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்காக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவார்கள்.

6. அரசினர் தீர்மானம்.

அரசினர் நூல் நிலையக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"1950-ம் ஆண்டு தமிழ்நாடு பொது நூல் நிலைய விதிகளின் (2)(1) (v) -வது விதியையொட்டி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் குறிப்பிடப்படும் ஒரு தேதியன்று இப்பேரவை, 1948-ம் ஆண்டு தமிழ்நாடு பொது நூல்நிலையச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 25/1948) 3-வது பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட அரசினர் நூல்நிலையக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந் தெடுக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) அரசினர் நூல்நிலையக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க, அரசினர் நூல்நிலையக் குழுவிற்கு ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக, வேட் பாளர் நியமனத் தாள்களை 25-11-1967 சனிக்கிழமை மாலை 3 மணிக் குள், செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள்கள் வேண்டுவோர், செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட் புத் தாள்கள் 27-11-1967 திங்கட்கிழமை காலை 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 27-11-1967 திங்கட்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படு மாயின், 28—11—1967 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே உறுப்பினர்களின் ஓய்வு அறையில் வாக்களிப்பு நடைபெறும்.

7. அரசினர் மசோதாக்கள்.

(அ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு, கேட்டுப்பெறல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்த மசோதா.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967-ம் ஆண்டு தமிழ்நாடு